**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வேளாண்மைப் பொறியியல் - ஆழ் உழவுப் பணி மேற்கொள்ள 50 சட்டிக் கலப்பைகள் (Disc Plough) ரூ.9.05 இலட்சம் செலவில் வாங்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மைப் (வே.பொ 1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.312**

**நாள்.10.8.2000**

**படிக்கவும்**

1. அரசு நேர்முகக் கடித எண்.13367/வமதி/2000-1 வேளாண்மை நாள். 10.4.2000.
2. தலைமைப் பொறியாளர் (வே.பொ) சென்னை கடித எண்.டி2/27541/2000 நாள்.8.6.2000.

---

**ஆணை**

வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்போது, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், 2000-2001 ஆம் நிதியாண்டில், ஆழ் உழவுப் பணி மேற்கொள்ள ரூபாய் 15/- இலட்சம் செலவில், 50 சட்டிக் கலப்பைகள் வாங்கப்படும் எனத் தெரிவித்தார்.

2. இந்த அறிவிப்பின் அடிப்படையில் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அனுப்பிய கருத்துருவில் விவசாயிகள், புதிய நிலங்களில் ஆழ் உழவுப் பணி மேற்கொள்ள விரும்புவதாகவும், இவ் ஆழ் உழவுப் பணிக்கு சட்டிக் கலப்பைகள் (Disc Plough) அவசியயம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பயன்படாத நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Waste Land Development Programme) ஆழ் உழவுப் பணி மேற்கொள்ள சட்டிக் கலப்பைகள் மிகவும் அவசியம் என்றும் தெரிவித்து, நடப்பு நிதியாண்டில் (2000-2001) 50 சட்டிக் கலப்பைகள் (Disc Plough) ரூ.9.05 இலட்சம் செலவினத்தில் வாங்குவதற்கான ஆணையினை வழங்கும்படியும் அரசினைக் கேட்டுள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (வே.பொ)வின் செயற் குறிப்பினை அரசு தீர ஆராய்ந்து நடப்பு நிதியாண்டில் (2000-2001) 50 சட்டிக் கலப்பைகளை (Disc Plough)

"2401-08 "

5. நடப்பு வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. இருப்பினும் 2000-2001 திருந்திய வரவு செலவுத் திட்டம் / இறுதி திருந்திய நிதி ஒதுக்கீட்டில் தேவையான நிதியொதுக்கம் செய்வதை எதிர்நோக்கி தலைமைப் பொறியாளர் (வே.பொ) இச்செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறார். இச்செலவினத்திற்கான நிதி யொதுக்கத்திற்குத் தேவையான முன்மொழிவுகளை நிதித் துறைக்குக் குறிப்பிட்டக் காலக் கெடுவுக்குள் அனுப்பும்படியும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை, நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.62519 / வேளாண்மை / 2000-1 நாள்.9.8.2000 இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ஆதிமூலம்,

அரசுச் செயலாளர்,

பெறுநர்:

தலைமைப் பொறியாளர் (வே.பொ) சென்னை-35.

தலைமைக் கணக்காயர், சென்னை-18

தலைமைக் கணக்காயர், சென்னை-18. (பெயரில்)

தலைமைக் கணக்காயர், சென்னை-6.

தலைமைக் கணக்காயர், சென்னை-35.

சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை-35.

நகல்:-

தனிச் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

நேர்முக உதவியாளர், வேளாண்மைத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

வேளாண்மைத் துறைச் செயலரின் தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை-9.

நிதி (வேளாண்மை) துறை, சென்னை-9.

இருப்புக்கோப்பு / உதிரிகள்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.